# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1868/64 - 2014 ජූනි 27 වැනි සිකුරාදා - 2014.06.27

*1868/64 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : வ/18/54/2001.

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் சந்திமா திசாநாயக்க ஆகிய என்னால், காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டை அரசுக்கு எடுத்துக் கொண்டதன் பொருட்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகையான மூவாயிரத்து நானூற்றி முப்பத்தெட்டு ரூபா ஐம்பத்தேழு சதம் (3,438.57/-) பணம் இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக் கொள்வதற்கு கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. 575/கா. எடு. இன் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

சந்திமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

2014.05.12.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | தெஹிகஹவில, வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாது ; |
| வரைபட இல. | : | ஆ. வ. இல. கம். 3405 ; |
| துண்டு இல. | : | 4 ; |
| விஸ்தீரணம் | : | 0.0038 ஹெக்டயார்; |
| அமைவிடம் | : | மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், தேலத்துற கிராமத்தில் அமைந்துள்ளது. |

07 - 367

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ம/அபி/2/நீதிமன்ற வைப்பில் இடுதல்.

2013.10.29 ஆந் திகதிய 1838/50 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் எனது குறிப்பு இல. ம/அபி/2/நீதிமன்ற வைப்பில் இடுதல் சம்பந்தமாக ஆரம்ப வரைபட இல. 3653 இல் துண்டு இல. 03 இன் விஸ்தீரணம் 0.0017 ஹெக்டயார் என தவறுதலாக உள்ளதால் அது 0.0077 ஹெக்டயார் என திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தமரா டீ. பெரேரா,
பிரதேச செயலாளர்,
மஹர.

2014.06.05.

07 - 368/1

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ம/அபி/2/நீதிமன்ற வைப்பில் இடுதல்.

2013.06.01 ஆந் திகதிய 1812/32 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் எனது குறிப்பு இல. ம/அபி/2/நீதிமன்ற வைப்பில் இடுதல் சம்பந்தமாக ஆரம்ப வரைபட இல. 3801 இல் துண்டு இல. 34 இல் பெல்லங்கஹவத்தை என்று அழைக்கப்படும் காணி "அளுபோகஹ கும்புர" அல்லது "கலபடகும்புரபில்லேவ" என திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தமரா டீ. பெரேரா,
பிரதேச செயலாளர்,
மஹர.

2014.06.05.

07 - 368/2


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.